Registered as a NewsPaper

பக்கங்கள் - IV

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை-23 06-02-2004 வெள்ளிக்கிழமை இசை 363

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ பதிவுபட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்.
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
(சி-8689) தர்மபுரம்.

# ஜேர்மன் அமைச்சரக அதிகாரிகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தமது ஐரோப்பிய விஜயத்தின் மூன்றாவது கட்டமாக நேற்று ஜேர்மன் பொருளாதார, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பேர்ளினில் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு இராஜாங்கச் செயலாளர் எறிக்ஸ்ரதர், ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சின் வெளிவிவகார பிரதிச் செயலாளர் கேர்ஸ்ரின் முல்லர் ஆகியோரை அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது இலங்கையில் நடைபெறும் சமாதான நடவடிக்கைகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது. உடனடி மனிதாபிமானப் பிரச்சினை குறித்து விளக்கிய அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு 2 வருடங்கள் ஆகும் நிலையில் மக்கள் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்தும் விளக்கினார். தொடர்ந்து செல்லும் சனாதிபதிக்கும் (IVஆம் பக்கம் பார்க்க)



எறிக் ஸ்ரதருடன் அரசியல்துறைப் பொறுப்பாளர்.

# சனாதிபதி-பிரதமரிடையே கருத்தொருமை வேண்டும்

# தவறின் தீய சக்திகளால் வன்முறை வெடிக்கும்!

## டொன் புருவ் ஹொவ்டே எச்சரிக்கை

**சிறிலங்கா சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்தொருமையொன்றை எட்டுவதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடரமுடியும். இரு தரப்பும் இணக்கப்பாட்டை விரைவில் எட்டத் தவறும் பட்சத்தில் தீய சக்திகள் இனங்களுக்கிடையே வன்முறைகளைத் தூண்டிவிடக் கூடும். இவ்வாறு சிறிலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் டொன் புருவ் ஹொவ்டே தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டு வருவது குறித்து இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் வரவேற்றுள்ளார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டார்கள். ஆயினும் இனங்களுக் (IVஆம் பக்கம் பார்க்க)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சரக்கு விமானம் தரையில் மோதி சேதம்

## 10மணி நேரம் விமானப்போக்குவரத்து தடை

(கொழும்பு)

சிறிலங்கா சரக்கு விமானமொன்று நேற்று முன்தினம் இரவு பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கும் போது தரையில்மோதிச் சேதமடைந்தது. ஐ.எல்-18ரக நான்கு இயந்திரங்களைக் கொண்ட இவ்விமானம் இரவ 10.30 மணியளவில் விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் உயிர்சேதம் ஏற்படாத போதும் 10மணி நேரம் விமான சேவைகள் தடைப்பட்டன.

எக்ஸ்போ விமானச் சேவை நிறுவனத்தால் சேவையிலீடுபடுத்தப்பட்ட இவ் விமானம் துபாயிலிருந்து கொழும்புவந்து பண்டார நாயக்க (IVஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க உதவி அமைப்பின் பிரதிநிதி யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க உதவும் அமைப்பின் ஆசியப்பிராந்திய நிலையத்திற்கான பிரதி நிர்வாக அதிகாரி மாஸ் எட்லோங் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 11ம் திகதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இவர் இலங்கைக்கு வருகை தந்து 4 நாட்கள் தங்கியிருப்பார். இதன்போது எதிர்வரும் 13ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார்.

இவ்விஜயத்தின் போது அரசு-புலிகளுக்கிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபின் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற அரசியல், இராணுவ, (IVஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

04.02.2004 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகயீனம் காரணமாகப் போராளியொருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் றஞ்சன்/பவளராதன் (கந்தவனம் சிவனேசன் கடுக்காமுனை கொக்கட்டிச்சோலை (IVஆம் பக்கம் பார்க்க)

### ஆக்கிரமிப்பு பகுதிகளில் மீள்குடியமர வலியுறுத்தி

# சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாம் நாளாக நேற்றும் தொடர்ந்தது!

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கு மற்றும் தென்மராட்சி தெற்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டங்கள் 2ஆம் நாளாக நேற்றும் தொடர்ந்தது.

வலி. வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் காலை பத்துப் பொதுமக்களே சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தபோதும் மேலுமிருவர் பின்னர் அன்றைய தினமே இணைந்து கொண்டிருந்தனர். அத்துடன் நேற்றைய தினமும் மேலும் ஒருவரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொண்டதன் மூலம் 13 பேர் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

இதனிடையே சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒருவரை யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி சுசில் சந்திரபால சந்திக்கவிடுத்த அழைப்பை அவர்கள் நிராகரித்து விட்டனர். தேவையெனின் அவரைப் போராட்ட மையத்திற்கு வருமாறும் அவர் (IVஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.இல் வீதியால் சென்ற போராளிகள் மீது படையினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல்!

## ஆத்திரமடைந்த மக்கள் படையினருடன் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களைப் படையினர் தாக்கியதால் அளவெட்டிப்பகுதியில் பொது மக்களுக்கும் படையினருக்குமிடையே பெரும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டி அரசியல் துறைப்பொறுப்பாளர் ஜனா மற்றும் சிட்டு ஆகிய போராளிகளையே படையினர் இவ்வாறு மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

காங்கேசன் துறைவீதி 8ஆம் கட்டையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; மேற்படி வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொணடிருந்த பிரஸ்தாப இரு போராளிகளும் வீதியில் காணப்பட்ட சன நெரிசலால் தமது மோட்டார் சைக்கிளை வீதியோரமாக நிறுத்த முற்பட்டனர். அப்போது மேற்படி வீதி ஓரமாகஉள்ள தோட்டம் ஒன்றினுள் பதுங்கியிருந்த சில படையினர் வீதிக் (IVஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தை சோதனைச்சாவடியூடாக சயனைட்டுடன் சென்ற போராளிகளைக் கைது செய்ய சிறி. படையினர் முயற்சி

## நீண்ட நேர இழுத்தடிப்பின் பின் செல்ல அனுமதித்தனர்

வவுனியா ஓமந்தை சிறிலங்கா இராணுவச் சோதனை நிலையத்தில் நேற்று சயனைட் குப்பிகளுடன் வந்த இரு போராளிகளைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தினர் அவர்களைக் கைது செய்ய முற்பட்டவேளை, சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரின் தலையீட்டினால் பல மணி நேரத்தின் பின் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, நண்பகல் 12.30 மணியளவில் வவுனியாவிலிருந்து வன்னிக்கும், வன்னியிலிருந்து வவுனியாவுக்குமாக வந்த இரு போராளிகள் மேற்படி சோதனை நிலையத்தில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவ்வேளை, அவர்களை வழமைக்கு மாறாக உடல் சோதனைக்கு உட்படுத்த முற்பட்டபோது அதற்கு போராளிகள் கடும் (IVஆம் பக்கம் பார்க்க)

# சேர். பொன் இராமநாதன் முன்பள்ளி நேற்றுத் திறப்பு



(அலுவலகசெய்தியாளர்)

சேர்.பொன் இராமநாதன் முன்பள்ளி திறப்புவிழா நேற்று கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் இராமநாதன் கமத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை மகாதேவா ஆச்சிரம தவத்திரு கணேசானந்த சுவாமிகள், கிளிவலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புத்தளபதி கோபித் ஏற்றிவைத்தார். அடுத்து முன்பள்ளியினை கிளிவலயக் கல்விப் பணிப்பாளர் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து கருத்துரைகளை (பேராசிரியர் சிற்றம்பலம், கிளிவலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம், கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் கணேசபிள்ளை, சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த காண்டீபன் ஆகியோர் வழங்கினர்.

அடுத்து சிறார்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் முன்பள்ளி வளாகத்தில் கப்டன் ஆரூரன் நினைவாக ஆரூரனின் சகோதரியினால் பழமரக்கன்று நாட்டப்பெற்றது.

நிகழ்வில் தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த சேரமான், கிராமசேவை அலுவலர் திருமதி ரவீனா மற்றும் கிராம மக்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர். (சோ)

# திருமலையில் மின் வசதியற்ற பாடசாலைகளுக்கு சூரிய மின் கலத் தொகுதிகள் வழங்கல்

திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்று, வெருகல் மற்றும் மூதூர் கிழக்கு பிரதேசங்களில் மின்சார வசதியற்ற பாடசாலைகளுக்கும், பொது இடங்களுக்கும் சூரிய மின் கலங்கள் திருகோணமலை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான நிகழ்வு சேனையூரில் அமைந்துள்ள நியாப் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு மதியுரையக இணைப்பாளர் ஜீவன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். திரு மலை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் தர்மன் நிகழ்வில் பங்கு பற்றிப் பேசும்போது, அமெரிக்காவில் வாழும் தமிழ் உறவுகளின் நிதியின் மூலம் இச்சூரிய மின் கலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். மாணவர்களின் கல்வி நலனுக்கு இவ்வுதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், வெருகல் பிரதேசப் பொறுப்பாளர் தங்கன், மூதூர் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பவான், மூதூர்ப் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் கோபால் ஆகியோரும் பங்குபற்றினர். (25)

# கோழிக்காய்ச்சல் அபாயம் குறித்து வடபகுதி மக்களுக்கு எச்சரிக்கை

தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு நல்ல இனக்கோழிக்குஞ்சுகள் மற்றும் பறவைகள் என்பன கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான பறவைகளிலிருந்து "பறவைக்காய்ச்சல்" என்னும் நோய் தொற்றும் அபாயம் ஏற்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்று வரை கணிசமான அளவில் வெளிநாடுகளில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. எனவே இவ் ஆபத்தில் இருந்து மக்களைக் காப்பதற்காக வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் கோழிக்குஞ்சுகள், தாராக்குஞ்சுகள் போன்ற பறவை இனங்களை கால்நடை வைத்தியரின் உறுதிப்படுத்தலுடனோ அல்லது அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவரிடம் இருந்தோ பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மை பகுதியினர் மக்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

-உலக உணவுத்திட்டத்தினால் -

# பாடசாலை சிறார்களுக்கான நலன்புரித்திட்டம் விஸ்தரிப்பு

வடக்கு கிழக்கில் பாடசாலை செல்லும் பருவத்தில் உள்ள சிறுவர்களுக்கான நலன்புரித்திட்டத்தை உலக உணவுத்திட்டம் இவ் ஆண்டு மேலும் விஸ்தரிக்கவுள்ளது. கடந்த ஆண்டு 33000 மாண வர் களுக்கு போசாக்கு உள்ள மதிய போசன உணவை வழங்கிய ஐநா அமைப்பு இந்த ஆண்டு 1,70000 பேருக்கு பகல் உணவை வழங்கவுள்ளது.

வடக்கு கிழக்கில் போர் அனர்த்தங்கள் காரணமாக 25 சதவீதமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டுள்ளனர். இதே எண்ணிக்கையிலான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்தி பாடசாலை செல்ல ஊக்கமளிப்பதே உலக உணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரத்தின் விலையைக் குறைப்பதற்கு யதார்த்த பூர்வ நடவடிக்கை எடுக்குக

## அரசாங்கத்திடம் கமக்காரர் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

உரத்தின் விலையைக் குறைப்பதற்கு யதார்த்தபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இலங்கை கமக்காரர்கள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

குறைந்த விலைகொண்ட யூரியா பொதியின் விலையை 200 ரூபாவால் குறைப்பது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் இன்னமும் ஆவணங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு குற்றஞ்சாட்டுகின்றது.

வரவு-செலவுத் திட்டத்தில் 150 ரூபா உரமானியம் பிரேரிக்கப்பட்டிருப்பதால் 50 ரூபா விலைக்குறைப்பாகவே இருக்கிறது என கமக்காரர்கள் சங்கம் கூறுகின்றது.

உரத்தின் விலை எந்தெந்த காலப்பகுதிகளில் எவ்வாறு குறைக்கப்படும் என்பது தொடர்பான விடயத்தையும் அறிவிக்கவில்லை. உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நிதியமைச்சு ஆர்வம் காட்டவில்லை என கமத்தொழிலாளர்கள்சங்கம் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

## சாவு அறிவித்தல்

### சுப்பையா சதாசிவம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சதாசிவம் அவர்கள் (02-02-2004) திங்கட்கிழமை விறற்றனில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசம்மாவின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், உருத்திரசிங்கம் (கொலன்ட்) வன்னியசிங்கம் (பிரதம எழுதுநர் யாழ். மாவட்ட நீதிமன்றம்), அமிர்தலிங்கம் (விரிவுரையாளர், ஸ்ரீபாதக் கல்லூரி பத்தனை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகம், காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற கந்தசாமி தர்மலிங்கம், காலஞ்சென்ற சாந்தலிங்கம் சிவஞானம் (சாமியார், முருகண்டி), இராசலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும், நல்லையா, சண்முகராசா, ஏகாம்பரம், கிளி, இராசாத்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவரது ஈமக்கிரியைகள் 08-02-2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செருக்கம்புல வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
சா. மதன்
(பெறாமகன்)

(4214)

## கலந்துரையாடல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சமூக நலன் விரும்பிகள், சமூக சேவையாளர்கள், கிராம சேவையாளர்கள் என பலதரப்பட்ட 400 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், அரசியல் தொடர்பாகவும்,காவல்துறைப் பொறுப்பாளர் சமூக மேம்பாடுகள், குற்றத்தடுப்பு நடவடிக்கை, சட்ட ஒழுங்கு, வீதிப் போக்குவரத்து பற்றியும், புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர், 2004 ஆம் ஆண்டுக்காக முன்னெடுக்கப்படும் சமூக சேவைகள் தொடர்பாகவும் பொருண்மிய இணைப்பாளர், சமகால பொருண்மியம் தொடர்பாகவும் கருத்துக்களை வழங்கினார்கள். (12)

## விண்ணக வாழ்வின் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மரணம் நித்திய மாளிகையின் தங்கத் திறவு கோல்

அமரர் உயர் திரு.
சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

இல. 703/7ஆம் யூனிற், இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

மண்ணில் 1925-05-01 — விண்ணில் 2000-03-06

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
என்று கூறிய அன்புத் தெய்வமே
எமது அன்பு தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
எம். சபின்ஸ்,
கல்மடுநகர்.

(4208)

## சாவு அறிவித்தல்

### இராமலிங்கம் செல்லத்துரை

புதுக்குளம் மன்னரைச் சேர்ந்த இராமலிங்கம் செல்லத்துரை அவர்கள் 03-02-2004 அன்று சாவடைந்துள்ளார். அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பு, திருவெம்பலம் சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், அன்னலட்சுமி, இராமலிங்கம், நாகேஸ்வரி, நவரட்ணராஜா, சதாசிவம், மகேஸ்வரன் (டேவிற்), வாமதேவன் முத்துமாரி, சோதிலிங்கம், மகாலட்சுமி, காலஞ்சென்ற கௌரிமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஐயம்பிள்ளை செல்வலிங்கம், ரவீந்திரராசன், லோகேஸ்வரி, விஜயா, நாகேஸ்வரி, மலர் அருட்சுகி, மங்கையற்கரசி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிகலா, கணேசலிங்கம், தேவி ரோகினி, மகாலிங்கம், சுந்தரலிங்கம், கைலாசபதி, சுயந்தன், தர்சன் வேந்தன், கௌரிசன், கௌரமிகா, குகவரதன், குகவதனி, ததுர்ஷன், திருத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (06-02-2004) இன்று நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குளம் இந்து மயானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(சீ-4105)

தகவல்:
செ. இராமலிங்கம்
(மகன்)

# சிறிலங்காவில் எரிபொருள் நிலையங்களை கொள்வனவு செய்ய இந்திய, சீனநிறுவனங்கள் போட்டி

(கொழும்பு)

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்பட உள்ள 100 எரிபொருள் விற்பனை நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு முற்படும் இரண்டு இந்திய நிறுவனங்களுடன் சீன நாட்டு நிறுவனம் போட்டியில் குதித்திருப்பதாகத் தெரியவருகிறது.**

தனியார் மயமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 100 எரிபொருள் விற்பனை நிலையங்களை விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நிலையங்களை கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன. இதன்படி இரண்டு இந்திய நிறுவனங்களுடனும் ஒரு சீன நிறுவனம் உள்ளிட்ட நான்கு நிறுவனங்கள் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளன.

இந்தியாவின் பாரத் பெற்றோலிய நிறுவனம் மற்றும் இந்துஸ்தான் பெற்றோலிய நிறுவனம் ஆகியனவும் சீனாவில் சினோபெக் நிறுவனமும் உள்நாட்டு நிறுவனமான கிழக்கு மேற்கு பெற்றோலிய நிறுவனமும் இந்த எரிபொருள் நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்குப் போட்டியில் குதித்துள்ளன. இந்த நான்கு நிறுவனங்களில் எந்த நிறுவனத்திற்கு எரிபொருள் நிலையங்களை விற்பது என்று அடுத்த இரண்டு வாரங்களுக்குள் முடிவு செய்யப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த எரிபொருள் நிலையங்களை விற்பதற்கான கேள்வித் தொகை நாற்பது மில்லியன் டொலரிலிருந்து எண்பது மில்லியன் டொலர் வரை அதிகரிக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்த எரிபொருள் நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கான போட்டியிலிருந்து இந்தியாவின் ரிலயன்ஸ் இண்டர்டீஸ் மற்றும் மலேசியாவின் தேசிய எண்ணெய் நிறுவனமான பொற்றோராஸ் என்பன போட்டியிலிருந்து விலகிக்கொண்டன. கடந்த ஆகஸ்ட் மாதம் பத்துக்கு மேற்பட்ட நிறுவனங்கள் இந்த நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டி இருக்கின்றன.

கடந்த ஆண்டில் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டி இருக்கின்றன.

கடந்த ஆண்டில் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்திய ஒயில நிறுவனம் 75 மில்லியன் டொலருக்குக் கொள்வனவு செய்திருந்தது.

நாட்டில் சுமார் 1000 எரிபொருள் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 362 நிலையங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிர்வகித்து வந்தது. இவற்றில் 100 ஏற்கனவே விற்கப்பட்டு விட்ட நிலையில் எஞ்சிய 100 நிலையங்களை கொள்வனவு செய்யவே இந்திய, சீனநிறுவனங்கள் போட்டியில் குதித்துள்ளன.

எஞ்சிய பெரும்பாலான நிலையங்களை சிறிய முதலீட்டாளர்களே நிர்வகித்து வருகின்றனர். இந்த புதிய விற்பனை முயற்சி இந்த வருடத்தில் மிகப்பெரிய சொத்து விற்பனையாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சூட்டுக்கொலை

தெகிவளை மற்றும் கொறுவெலப் பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த குண்டு பாலா என்பவர் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார். களுபோவில விகாரைக்கு அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இவர் கொல்லப்பட்டுள்ளார். வான் ஒன்றில் வந்தவர்களே இவரை சுட்டுக் கொன்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அரச அதிபர் பதவி வெற்றிடங்களை நேர்முகப்பரீட்சை மூலம் நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

மாவட்ட செயலாளர் பதவிகள், அரச அதிபர் பதவிகள் ஆகியவற்றிற்கு தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிடம் இருந்து உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிர்வாக சேவை தரம்-Iஇல் எட்டு வருடத்துக்குக் குறையாத சேவையைப் பூர்த்தி செய்தவர்களாகவும் கடந்த ஐந்து ஆண்டு காலத்துள் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டு இருக்காதவராகவும் இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பறவைக் காய்ச்சல் பரவும் வழிகள் மூடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பறவைக் காய்ச்சல் பரவுவதற்கான வழிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் சுகாதார அதிகாரிகள் கூறியிருக்கின்றார்கள்.

நாட்டின் முக்கிய துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றில் இயங்கும் நோய் தடுப்பு பணியக அதிகாரிகள் 24 மணித்தியாலங்களும் விழிப்புடன் இருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அமர சேகர தெரிவித்தார்.

## சோமவன்ச அமரசிங்க தோன்றும் காட்சியை ஒளிபரப்ப ரூபவாகினிக்கு சனாதிபதி தடைவிதிப்பு

(கொழும்பு)

கொழும்பு பெப்ரவரி 4 ஆம் திகதி அரசு ஊடகங்களின் ஒரு பகுதி ஜே.வி.பி ஆதரவான நிலையைக் கொண்டிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தோன்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் இரண்டுக்கு சனாதிபதி சந்திரிகா தடைவிதித்துள்ளார்.

கடந்த ஞாயிறு ஐ.ரி. என் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருந்த சோமவன்சவுடனான நேர்முக நிகழ்ச்சி ஒன்றையும் ரூபவாகினி தொலைக்காட்சியின் மற்றொரு நிகழ்ச்சியையும் சனாதிபதி நிறுத்தி உள்ளார் என்று தெரியவருகின்றது.

தொலைக்காட்சியில் சோமவன்சவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை சு.க. ஜே.வி.பி கூட்டு நிகழ்ச்சியில் இடம்பெற்ற உரைகளை ஒளிபரப்புவதற்கு பயன்படுத்தலாம் என அரச ஊடகங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போது சனாதிபதி தெரிவித்தார்.

அரச ஊடகங்களின் ஒரு பகுதி அளவுக்கு அதிகமாக ஜே.வி.பி ஆதரவான இனரீதியான நிலையை கொண்டிருப்பதாக ரூபவாகினி கூட்டு ஸ்தாபனத்தின் தலைவரும் சனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் சனாதிபதிக்கு தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் ஊடகங்களுக்கும் ஜே.வி.பிக்கும் ரூபவாகினியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தகவல்களை தெரிவிப்பதாகவும் ஹரீம் பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார். இதனை அடுத்து ரூபவாகினியின் நிர்வாகத் தலைவர் நிசாந்த ரணதுங்கவை அரசியல் தொடர்பான நிகழ்ச்சிகளின் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கும் சனாதிபதி தீர்மானித்துள்ளார். எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## - ஆ.அ. வங்கியின் உதவியுடன் -
## வீதி அபிவிருத்தி தொடர்பாக 13 திட்டங்கள் அமுலில்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வீதி அபிவிருத்தி தொடர்பான 13 திட்டங்கள் அமுல் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 நெடுஞ்சாலையின் ஓமந்தை முதல் முகமாலை வரையிலான வீதிப் புனரமைப்பும் இதில் அடங்குகின்றது.

மார்ச் மாதம் நிறைவு பெற இருக்கும் குறித்த திட்டத்திற்கு 43 கோடி ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பையும் மாத்தளையையும் இணைக்கும் நெடுஞ்சாலையின் ஒரு பகுதியும் தற்போது நிர்மாணிக் கப்படுகிறது.

800 கோடி ரூபா செலவாகும் இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இந். வம்சாவளியினரை அடையாளப்படுத்தும் வகையில் தேர்தலை எதிர்நோக்கத் தயாராகிவருகிறோம்
### - இ.தொ.ஐ.முன்னணியின் பொதுச்செயலர்

(கொழும்பு)

நாடு தேர்தல் ஒன்றை எதிர்நோக்கயுள்ளதால் அதற்கு ஏற்ற விதத்தில் இந்திய வம்சாவளியினரை அடையாளப்படுத்தும் வகையில் தேர்தலை எதிர்நோக்கத் தயாராகி வருவதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எ .சதாசிவம் நுவரெலியாவில் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பேரினவாதக்கட்சிகளில் மலையக கட்சிகள் சங்கமமானதினால் இந்திய வம்சாவழி மக்களின் தனித்துவ அடையாளம் மங்கிப்போவதாகத் தெரிவித்த அவர், பாராளுமன்ற அங்கத்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக பேரினவாதக் கட்சிகளின. சின்னங்களைப் பயன்படுத்தியதனால் மலையக மக்களின் பேரம் பேசும் சக்தி முற்றாக மழுங்கடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தா.

மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அவர்களின் சக்தியைக் காட்டும் வகையில் அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் சதாசிவம் மேலும் தெரிவித்தார்.

## பறவைக் காய்ச்சலால் வியட்நாமில் 11பேர் பலி

வியட்நாமின் தென்பகுதியில் 16 வயது யுவதி ஒருவர் பறவைக் காய்ச்சல் நோய்க்கு பலியாகியுள்ளார்.

ஆசியாவின் பல நாடுகளைத் தாக்கியுள்ள இந்த நோய்க்கு பலியாகினோரின் எண்ணிக்கை தற்போது 16ஆக உயர்ந்துள்ளது.

வியட்நாமில் 11பேரும் தாய்லாந்தில் 5பேரும் பறவைக்காய்ச்சல் தொற்றி இறந்துள்ளனர்.

இவற்றைத்தவிர மேலும் 8நாடுகளில் இந்நோய் பரவியிருப்பதாக அறிவிக்கப்பட்டாலும் வியட்நாமில் அதன் தாக்கம் தீவிரமாகவுள்ளது.

அந்நாட்டில் ஒரு கோடி எழுதுவது இலட்சம் கோழிகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன அல்லது கொனறொழிக்கப்பட்டுள்ளன.

## அணுவாயுதத் திட்டத்தை நிறுத்துவதென்ற அறிவித்தல் மட்டும் போதாது
### -வடகொரியாவிற்கு தென்கொரியா தெரிவிப்பு

வடகொரியா அணுவாயுதத் திட்டத்தை நிறுத்துவதாக விடுத்த அறிவித்தல் மாத்திரம் போதுமானது அல்ல என்று தென்கொரியா கூறுகின்றது. அனைத்து அணு ஆலைகளையும் கலைத்து விடுவதற்கான முதல் நடவடிக்கையாக இருந்தால் மாத்திரமே இதனை ஏற்றுக்கொள்ள முடியும் என்று தென்கொரிய வெளியுறவு அமைச்சர் பின்சீமோன் தெரிவித்துள்ளார்.

அணுவாயுதத் திட்டங்களை நிறுத்தும் தீர்மானம் நீண்ட காலத்துக்கு உரியதொன்றாக காணப்படுமானால் இம்மாதம் ஆரம்பமாகும் பேச்சு வார்த்தைகளில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தகுந்த பதில் நடவடிக்கை எடுத்து நிவாரணம் வழங்கும் என்று அவர் கூறினார்.

இரண்டு கொரியாக்களும் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளும் கலந்துகொள்ளும் ஆறுகற்று பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 25ஆம் திகதி தொடரும்.

## சைப்பிரஸ் தீவை இணைப்பதற்கான பேச்சுக்கு ஐ.நா.செயலர் ஏற்பாடு

(வாஷிங்டன்)

பிளவு பட்டிருக்கும் சைப்பிரஸ் தீவை ஒன்றிணைப்பதற்கான முக்கிய பேச்சுவார்த்தைக்கு ஐ. நா. சபை செயலாளர் நாயகம் நாள் குறித்துள்ளார்.

கிரேக்க, துருக்கிய தலைவர்கள் எதிர்வரும் 10ம் திகதி கூடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

கிரேக்கத்தின் இராணுவ ஆட்சியாளர்கள் சைப்பிரசில் சதிப்புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் துருக்கி நாட்டு துருப்புக்கள் அதன் வட பகுதியில் ஊருடுவியதைத் தொடர்ந்து 1974 ஆம் ஆண்டு தொடக்கம் சைப்பிரஸ்தீவு பிளவு பட்டுள்ளது.

அதன் கிரேக்க அரசாங்கம் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளதுடன் மே மாதம் 1ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைகிறது.

## ஐவரிகோஸ்டிற்கு அமைதிப்படையை அனுப்பும் ஐ.நா.வின் யோசனையை அமெ.நிராகரித்தது

ஐவரிகோஸ்டிற்கு அமைதிப்படையை அனுப்பும் ஐக்கிய நாடுகள் சபையின் யோசனையை அமெரிக்கா நிராகரித்துள்ளது. அமெரிக்காவின் தூதுவர் யோல் நிக்கோ பொண்டி பாதுகாப்பு சபைகூட்டத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐவரிஸ்கோஸ்டின் உள்நாட்டு மோதலை முடிவுக்கு கொண்டுவருவதில் பிரான்ஸ் ஏற்பாட்டாளராக கடமை புரிந்தது. தற்போது நிலவும் அமைதியைப் பேண 6240 ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினர் தேவையென ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் 63 ஆயிரம் பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்
### இந்தியாவிற்கான சிறிலங்கா உயர்ஸ்தானிக ர் தகவல்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் சுமார் 63000 பேர் முகாம்களில் தங்கியிருப்பதாக இந்தியாவுக்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகர் கனித் நாலந்த தெரிவித்துள்ளார்.

இவர்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கு தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் முறுகல் தடையாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்கு சென்றுள்ள ஊடகவியலாளர் மத்தியில் அவர் உரையாற்றியபோது இலங்கை அகதிகள் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கு உரிய ஆவணங்கள் தயாரித்துக் கொடுப்பதற்கும் தமது உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் எனவே அவ்வாறான அகதிகள் தம்மோடு தொடர்புகொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (32)

- ரணில் - சனாதிபதி உடன்பாடு எட்டுவதாயின் -

# ஒரு வருடத்திற்கு பாராளு. கலைப்பதில்லை என சனாதிபதி சந்திரிகா உறுதிமொழி வழங்க வேண்டும்

## அரசாங்கம் வலியுறுத்து

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையேயான அரசியல் நெருக்கடி தீர ஓர்உடன்பாட்டுக்கு வருவதாயின் ஒரு வருடத்திற்குப் பாராளுமன்றத்தைக் கலைப்பதில்லை என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதிமொழி வழங்க வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான ஆலோசனையை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்க முன்வைத்துள்ளதாகவும் அவர் சனாதிபதியின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-நிதர்சனம் நிறுவனத்தின் -

# ஒலிப்பாடல் தொகுப்புகள் இன்று வெளியிடப்படுகின்றன

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தின் சிறப்பு வெளியீடுகளாய் ஒலிப்பாடல் தொகுப்புக்கள் வெளியீட்டு விழா இன்று மாலை 4.00மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தாயகக் கலைஞர்களும், புலம்பெயர் கலைஞர்களும் இணைந்த இசை சங்கமமாய் இசைவாணர் கண்ணனின் இசையில் "ஊர்போகும் மேகங்களும்" கேணல் கிட்டு பீரங்கிப் படையணியினதும், லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியினதும் பதிவுகளைத் தாங்கிய இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில் "வரும்பகை திரும்பும்" எனும் ஒலிப்பாடல் தொகுப்புக்கள் வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது. (33)

# ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத் தின் ஊடாக இலங்கைக்கு வந்த இந்திய பிரஜை ஒருவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் நேற்றுமாலை கைப்பற்றப்பட்டது.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 13லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# விபரம் திரட்டல்

சிறிலங்காவில் சுதந்திர தினத்தை புறக்கணிக்க கறுப்புக் கொடி கட்டியோரது விபரங்களைச் சேகரிக்கும் பணியில் வடமராட்சிப்பகுதியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் தம் தொழிலைப் பகிஷ்கரித்தும், கறுப்புக்கொடிகளைக்கட்டியும் கரிநாளாக அனுஷ்டித்தனர் இவ்வாறு அனுஷ்டித்தோரின் பெயர் விபரங்களைத் திரட்டி வரும் படையினர் கடற்தொழில் அனுமதியை பறிக்கப்போவதாக எச்சரித்துள்ளனர். (33)

# விளையாடிக்கொண்டிருந்த சிறுமிக்கு கருங்குளவிகள் கொட்டின

### மயக்கம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதி

(மல்லாவி)

கரும் குளவி கொட்டியதால் சிறுமி படுகாயம் அடைந்து மயங்கிய நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று பி.ப.1.45 மணியளவில் இடம்பெற்றது சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த அனிஞ்சியன் குளம் 2ம் பகுதியில் வசிக்கும் பாஸ்கரன் பானுசியா (வயது 03) என்பவருக்கு எங்கிருந்தோ வந்த கரும் குளவிகள் கொட்டின இதனையடுத்து அவர் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (24)

# இராணுவ கொமாண்டோக்கள் மெத்திரிகிரிய வங்கியில் கொள்ளை!

(கொழும்பு)

பொலனறுவை மெத்திரிகிய அபிவிருத்தி வங்கி கொள்ளையில் இராணுவ கொமாண்டோ வீரர்கள் இரண்டுபேர் ஈடுப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சனவரி 05ஆம் திகதி இவ் வங்கியிலிருந்து சுமார் 1கோடி 80லட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இதுதொடர்பாக சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்தும் 80 லட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. இக் கொள்ளை தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்ற பொலிசார் கூறிய தகவல்களின் அடிப்படையில் இக் கொள்ளையில் 05பேர் சம்பந்தப் பட்டிருப்பதாகவும், அதில் 02 இராணுவ கொமாண்டோக்களும் உள்ள டங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### சாகும்...

கள் அழைப்பு விடுத்திருந்தனர். இதே வேளை, வலி. வடக்கு பிரதேச செயலகம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றுவரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேரில பார்வையிட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் மக்களுடன் பேச்சுக்களை நடாத்தினர். சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் இன்றும் தொடரவுள்ளது. (27)

### அமெரிக்க...

சமூக நிலைமைகள் குறித்து, யாழ் அரச அதிபர் உட்பட பலரையும் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதுடன் அமெரிக்க அரசின் நிதி உதவியுடன் யாழ் மாவட்டத்தில மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்தும் ஆராய்வார். (33)

### யாழ்...

குப் பாய்ந்து வந்து போராளிகளைத் தம வசமிருந்த துப்பாக்கிப் பிடிகளால் கடுமை யாகத் தாக்கியுள்ளனர். தாக்குதலில் பாதிகக்பட்ட போராளிகளைத் தமது முகாமினுள் அழைத்துச் செல்லமுற்பட்டவேளை அதற்கு மறுப்புத் தெரிவித்த போராளிகள் - படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் கூடிய மக்களுக்கும் படையினருக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து அங்கு வந்திறங்கிய பொலிசார் படையினரை எச்சரித்ததுடன் போராளிகளைத் தம் வழியில் செல்லவும் அனுமதித்தனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் கண்காணிப்புக்குழு ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (27,33)

### வீரவணக்கம்...

மட்டக்களப்பு) என்பவரே சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

### சனாதிபதி-...

கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளும் இற்றைவரை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த இரு தரப்புக்களும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். நாட்டில் தொடர்ந்தும் அமைதி நிலவுவதற்கு இத்தகைய சந்திப்பு முக்கியமானதாகும்.

அரச தரப்பில் எத்தகைய அரசியல் முரண்பாடுகள் நிலவினாலும் கூட விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்புத் தொடர்ந்தும் இடம் பெற்று வருகிறது.

பாதுகாப்புத்துறை தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என பிரதமர் கோரியுள்ளார். பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாடின்றி பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது என்று பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை சனாதிபதி சந்திரிகா இந்த விடயம் தொடர்பான கட்டுப்பாட்டுப் பகிர்வுக்கு உடன்பட்டிருக்கிறார். முரண்பட்டிருக்கும் இவ்விரு தரப்பும் கருத்தொருமையொன்றை எட்டு வதன் மூலம் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடரமுடியும்.

இரு தரப்பும் இணக்கப்பாட்டை விரைவில் எட்டத்தவறும் பட்சத்தில் தீய சக்திகள் இனங்களுக்கிடையிலான வன்முறைகளைத் தூண்டி விடக கூடும் என அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

### ஓமந்தை....

எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந் நிலையில் சயனைட் குப்பிகளுடன் பயணிக்க முடியாது சயனைட் குப்பி வைத்திருக்கும் போராளிகளை உடன் கைது செய்யுமாறு தங்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டதாகக் கூறி அவர்களைக் கைது செய்ய முற்பட்டனர். போராளிகள் தமது ஆட்சேபத்தை தெரிவித்த வேளை, அவ்விடத்திற்கு வந்த மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இது விடயத்தில் தலையிட்ட வேளை, படையினர் தமது நிலையில் தொடர்ந்து விடாப்பிடியாக நின்றதைத் தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் மூலமான நடவடிகையால் தற்காலிகமாக இந்த நடைமுறையை நீக்குவதாகக் கூறி மாலை 5.30 மணியளவில் போராளிகளை மேற்கொண்டு பயணிக்க இராணுவத்தினர் அனுமதித்தனர்.

இது பற்றி வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிக்கையில், நாங்கள் இரு வருடங்களுக்கு முன்னர் சயனைட் குப்பிகளுடனேயே அரசியல் பணி செய்ய வவுனியாவுக்குள் வந்தோம். தொடர்ந்தும் அதனையே பின்பற்றி வருகின்றோம் இவ்வளவு காலமும் இல்லாத நடைமுறையொன்றை புகுத்த வேண்டுமென்றே படையினர் போராளிகளையும் மக்களையும் விசனமடையச் செய்யும் வகையில் நடந்து கொண்டுள்ளனர் என்று கூறினார்.

# கிளி.சர்வதேசப் பாடசாலை நேற்று திறந்து வைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கிளிநொச்சி நகரில் நிறுவப்பெற்றுள்ள சர்வதேசப் பாடசாலை திறப்பு விழா நேற்று பகல் 10.00மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

துறைப்பொறுப்பாளர் முரளி, கிளிமாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் ஏ.வி.கே.மாணிக்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனையடுத்து சர்வதேச பாடசாலையினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை





வெட்டித் திறந்து வைத்தார்.

மேற்படி சர்வதேசப் பாடசாலையில் 150 சிறார்கள் கல்விகற்க அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பத்துச் சிறார்களுக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற வகையில் 15 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலம் கற்கைகள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை லெப் சீலனின் தாயார் மெய்யப்பன் திரேசம்மா ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மலரஞ்சலி செலுத்தியதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்டியும், சர்வதேச பாடசாலைக் கொடியினை பள்ளிமுதல்வர் திருமதி இராமலிங்கமும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மங்கல விளக்கினை யுனிசெப் பிரதிநிதி திருமதி பெனிபுருன், கிளிமாவட்ட அரசியல்

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசன், மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் கந்தம்மான், கியூடெக் நிறுவன கிளி முல்லை மாவட்ட இணைப்பாளர் கணேசபிள்ளை மற்றும் சர்வதேச நிறுவன பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்.(சோ)

# இரவு ரோந்தில் ஈடுபட்ட பொலிசார் மீது தாக்குதல்

## ஒருவர் பலி; மற்றையவர் காயம்

பெலிஎத்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிசார் தமது இரவு காவல்ரோந்துப் பணியை முடித்துவிட்டு காவல் பணி மனைக்குத் திரும்பி வரும்பொழுது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிசார் ஒருவர் சம்பவ இடத்திலே மரணமானார். மற்றையவரும் காயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அவர்களிடமிருந்த ரி-56ரக துப்பாக்கியையும் தாக்குதல் நடத்தியே பறித்தெடுத்துச் சென்றுள்ளனர்.

அங்குள்ள பொதுமக்கள் பெலிஎத்த பொலிசில் இது சம்பந்தமாக புகார் செய்ததையடுத்து பொலிசார் காயப் பட்டவரையும், மரணம் அடைந்த வரையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

### கட்டுநாயக்க...

சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டவேளை முற்பக்கச்சில்லு இறங்கத்தவறியதால் விமானம் ஓடு தளத்தின் மையப் பகுதியில் விபத்துக்குள்ளாகியது.

இதனையடுத்து விமானத்தை ஓடு பாதைக்கு வெளியே நகர்த்தவும் ஓடுபாதை மின்விளக்குகளைச் சரிசெய்யவும் 10மணி நேரத்துக்கு மேல் பிடித்தது. நேற்றுக் காலை 8.15 மணியளவிலேயே விமான சேவை வழமைக்குத் திரும்பியது. அதுவரை கொழும்பு விமான நிலையத்துக்கு வந்த விமானங்கள் சென்னைக்கும் மாலைதீவுக்கும் திருப்பி அனுப்பப்பட்டன.

### ஜேர்மன்...

பிரதமருக்கும் இடையான பிரச்சினை தீர்க்கமுடியாதுள்ள நிலையில் மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகள் தாமதமின்றி தீர்க்கப்படவேண்டும்.

மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை தற்காலிகமாகவேனும் தீர ஆக்கபூர்வமான முறையில் சர்வதேச சமூகம் பயனுள்ள முயற்சிகள் எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

மக்களின் துயர நிலையைப் போக்கத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக ஜேர்மன் அமைச்சுக் குழுவினர் உறுதியளித்தனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.